www.Padasalai.Net

01.12.2024 முதல் 28.02.2025 மூன்று மாதங்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம்.

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

கடித(efile)எண். 11729 /பக5(1)/2024-1, நாள்: 11.12.2024

அனுப்புநர்
திருமதி. சோ.மதுமதி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை-01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – மேல்நிலைக் கல்வி – 2010-2011- ஆம் ஆண்டில் 135 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு 5 முதுகலை ஆசிரியர் வீதம் 675 முதுகலை ஆசிரியர் தற்காலிக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது – இப்பணியிடங்களுக்கு 01.06.2021 முதல் 31.05.2024 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டது- 01.06.2024 முதல் 30.11.2024 வரை ஊதிய கொடுப்பாணை வழங்கப்பட்டது – தற்போது 01.12.2024 முதல் 28.02.2025 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.142, பள்ளிக்கல்வித் (மே.நி.க)துறை, நாள் 20.05.2010.
2. அரசாணை (நிலை) எண்.177, பள்ளிக்கல்வித் (மே.நி.க)துறை, நாள் 05.07.2010
3. அரசாணை(1டி) எண். 46, பள்ளிக்கல்வித் (பக5(1)துறை, நாள். 03.03.2022
4. பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறை ந.க.எண்.021972/எல் / இ3/2021, நாள். 29.05.2024.
5. அரசு கடித (efile) எண்.8513/பக5(2)/2024-1, நாள்.19.09.2024.
6. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் 021972/எல் / இ3/2021, நாள். 20.11.2024.

------

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net

பார்வை 1 மற்றும் 2 –இல் காணும் அரசாணைகளில் 2010–2011 ஆம் கல்வி ஆண்டில் 135 அரசு /நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியும், அவ்வாறு மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்ட ஒவ்வொரு பள்ளிக்கும் 5 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 675 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. பார்வை 3–இல் காணும் அரசாணையில் இப்பணியிடங்களுக்கு 01.06.2021 முதல் 31.05.2024 வரை தொடர் நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டது. பார்வை 4–இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி இப்பணியிடங்களுக்கு 01.06.2024 முதல் 31.08.2024 வரை மூன்று மாதங்களுக்கு விரைவு ஊதிய கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டது. பார்வை 5–இல் காணும் அரசு கடிதத்தில் மேற்காணும் 675 முதுகலை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.09.2024 முதல் 30.11.2024 வரை 3 மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை வழங்கப்பட்டு முடிவுற்ற நிலையில், தற்போது 01.12.2024 முதல் 31.05.2025 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பார்வை 6–இல் காணும் கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து மேற்குறிப்பிட்டுள்ள 675 தற்காலிக முதுகலை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.12.2024 முதல் 28.02.2025 வரை மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான 01.12.2024 முதல் 28.02.2025 வரை மூன்று மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இக்கடிதம், அரசாணை (நிலை) எண்.334 நிதித்(சம்பளம்)துறை, நாள்.22.10.2022–இல் துறைச் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின்படி வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

11/12/24 2/3

(அரசு சார்புச் செயலாளர்)
அரசுச் செயலாளருக்காக.

11/12/24

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6

நிதித்(கல்வி–II)துறை , சென்னை–9.

சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:- இவ்வியக்கக ந.க எண்.021972/எல்/இ3/2021 நாள்: 19.12.2024

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இணை இயக்குநர்,

19/12/24

பெறுநர்:-

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

Scanned with OKEN Scanner